


# உயிர்க்கோளம்



இயற்கையை மாற்றி அழிக்கும் சக்தியை மனிதன் அடைந்துள்ளதால் அவன் இயற்கையை நோக்கும் அணுகுமுறை மிக முக்கியமானதாக உள்ளது. மனிதன் இயற்கையின் ஒரு அங்கமாக இருப்பதால் இயற்கையை எதிர்த்துப் போராடுவது என்பது அவன் தன்னைத்தானே எதிர்த்துப் போராடுவதாகும்.

– ரேச்சல் கார்சன்

### அத்தியாயக் கட்டகம்


7.1 அறிமுகம்
7.2 உயிர்க்கோளம்
7.3 சூழ்நிலை மண்டலம்
7.4 உயிரினச் சூழ்வாழிடங்கள்
7.5 உயிரினப் பன்மை
7.6 அழியும் நிலையில் உள்ள உயிரினங்கள்
7.7 உயிரினப் பன்மை பாதுகாப்பு


### கற்றல் நோக்கங்கள்

- உயிர்க் கோளத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் அகன்ற பரப்புப் பற்றி விளக்கமளிப்பது.
- புவியின் பரப்பில் உயிரினங்களின் பரவலையும் அவற்றின் இடத்திற்கேற்றத் தழுவலையும் விவரித்தல்.
- உயிர்க்கோளத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவர்களுக்கு உணர்த்துதல்.

## 7.1 அறிமுகம்

புவி சுமார் 4.6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகியது. புவியியலாளர்கள் புவியைப் பற்றியும் அதன் பல்வேறு கோளங்களைக் குறித்தும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். இந்தக் கோளங்கள் தற்போது அமைந்துள்ளது போல், புவி உருவாகிய போது அமையவில்லை. மாறாக புவி உருவான பிறகு அவை நீண்ட காலமாக பரிணாம மாற்றமடைந்தன. முதலில் புவி உருவான பிறகு நீண்ட காலமாக உயிரினங்கள் தோன்றவில்லை. நமது புவியில் முதல் உயிரினம் சுமார் 3.5 பில்லியன்ஆண்டுகளுக்கு முன்புதோன்றியதாகஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அதுவே, 'உயிர்கோளத்தின் பிறப்பு' என குறிக்கப்படுகிறது.

அதற்குப்பின் உயிரினங்கள் பரிணாம வளர்ச்சி அடைந்து எண்ணிக்கையில் இரட்டிப்பாகி பல்வேறு வகைகளாகப் பெருகி உயிரினங்கள் தற்போதைய உயிர்க்கோளத்தின் அளவிற்கு வளர்ந்துள்ளது.

கடந்த 100 ஆண்டுகளாக, மனிதன் இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாகவும், தவறாகவும் பயன்படுத்தியுள்ளான். இது புவியின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பெரிதும்